REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 31உ செவ்வாய் (14—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 1உ புதன் (15—6—55) [இதழ் 311

மௌன விரதம் தந்த பலன்!

அலகாபாத் சந்திப்பு இரயில்வே நிலையத்திலுள்ள டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தா ஒருவர், 'மௌன விரதம்' மேற்கொண்டதின் காரணமாகப் பல பிரயாணிகள் தங்கள் பிரயாணத்தைக் கைவிட வேண்டியவர்களானார்களாம்!

தம்மிடம் கேள்விகள் கேட்ட பிரயாணிகளுக்குப் பதில் எதுவும் சொல்லாமல் ஒரு சீட்டில் எழுதிக்கொடுத்தாராம் அவர்.

இதைச் சகியாத பிரயாணிகள், நிலைய உதவி அதிகாரியின் உதவியை நாடினராம். அவர், இதனை அங்குள்ள பிரதம குமாஸ்தாவிடம் தெரிவிப்பதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டதாம்!

பிரயாணிகளும் தங்கள் பயணத்தைக் கைவிட்டனராம்!

சிமெண்ட் தொழிற்சாலை துவங்க திரைமறைவு பேரமாம்!

மெய்ப்பிக்கப்பட்டால் பதவியை துறப்பாராம்!

மந்திரி காளா வெங்கிடராவ்—சட்டசபை உறுப்பினர் மோதுதல்!

குண்டூர் திட்டக் குழுக் கூட்டத்தில் சலசலப்பு

"புதிதாக ஒரு சிமெண்ட் தொழிற்சாலையைத் துவக்குவதில் குறிப்பிட்ட ஒரு தனி நபருடன் ஆந்திர அரசாங்கம் 'திரை மறைவு பேரத்தில்' ஈடுபட்டு இருக்கிறது. அதன் விளைவாகவே அந்தத் தனி நபருக்கு மேற்படி தொழிற்சாலையைத் துவக்குவதற்கான அனுமதிச் சீட்டைக் கொடுத்திருக்கிறது."

—இவ்வாறு ஆந்திர அரசாங்கப் போக்கைக் குறித்து, மந்நேன வெங்கிட ராஜு என்ற பாபட்லா தொகுதி சட்டசபை உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குண்டூர் மாவட்ட திட்டக் குழுவின் ஆலோசனைக் கூட்டம், திட்ட அமைச்சர் காளாவெங்கிடராவ் அவர்கள் தலைமையில் கூடியது.

அப்பொழுது, அவர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குண்டூர் மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்துக் குறிப்பிட்டுவிட்டு, அரசாங்கத்தால் துவக்கப்பட இருந்த சிமெண்ட் தொழிற்சாலை, நஷ்டம் ஏற்படக்கூடும் என நிபுணர்களால் கூறப்பட்டதால் கைவிடப்பட்டு அத்தொழிற்சாலையைத் துவக்கும் ஏற்பாடும் தனி நபர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்தகவலைக் கேள்வியுற்ற சட்டசபை உறுப்பினர் வெங்கிடராஜு, 'நிபுணர்கள் கருத்தின் காரணமாக அல்லாது அந்தத் தனி நபருக்கும் அரசாங்கத்திற்கும் நடைபெற்ற திரை மறைவு பேரத்தின் பலனாகவே, 'சிமெண்ட் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் பொறுப்பு அத் தனி நபரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது' என்று கூறினர்.

அதுகேட்ட மந்திரி சீற்றம் கொண்டு, மேற்படி குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படுமானால், தாம் தம் மந்திரி பதவியைவிட்டு வெளியேறிவிடத் தயாராக இருப்பதாகக் கூறினர்.

அவசியம் ஏற்படும்பொழுது தனது குற்றச்சாட்டைத் தான் மெய்ப்பிக்கத் தயாராகஇருப்பதாக, சட்டசபை உறுப்பினர பதில் கூறினர்.

இந்த விவாதத்தின் விளைவாக, திட்டக்குழு கூட்டத்தில் பலத்த சலசலப்புக்கு இடமேற்பட்டு விட்டது.

'தில்லை 'சபாநாயகரு'க்கு சென்னை சபாநாயகர் சிபாரிசு?'

'நந்தன் சரித்திரம் மறந்தாரோ?'

மாதவரம் பொதுக்கூட்டத்தில் அண்ணா அறைகூவல்

மாதவரம் தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதியளிப்புக்காக, 12—6—55 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்று வெளிவந்திருக்கிறது. இன்று, 'பார்ப்பானை வேண்டுமானாலும் நீக்கிவிடுங்கள்; பக்தி மிகுந்த சடங்குகளை எப்படிக் கைவிடுவது?' என்று சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் கூறியதாக, கூட்டத்தில் கலந்துகொண்ட தோழர்கள் குறிப்பிட்டதையொட்டியும், சிவசண்முகம் பிள்ளையவர்கள், தில்லைத் திருப்பணிக்குப் பண உதவி செய்யக் கோரி விடுத்திருந்த அறிக்கை குறித்தும், அண்ணா அவர்கள் தந்த விளக்கம் கீழே தரப்படுகிறது:—

"தில்லை நடராசர் கோவிலின் ஒரு பகுதியை பழுது பார்ப்பதற்காக பணம்வேண்டுமென்றனர்; திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், 'தில்லைத் திருத்தலப் பணிக்குப் பணம் தந்து உதவுக' என்று,—'சட்டசபை சபாநாயகராயிருக்கும் நாம், தில்லை சபாநாயகருக்கு சிபாரிசு செய்வது பொருத்தமே,' என்ற எண்ணத்தினால் போலும்—அறிக்கை வெளியிட்டிருக்கிறார் எனச் செய்தி பார்த்தேன்; இந்தத் திருப்பணியைச் செய்வதில் ஈடுபட்டிருக்கும் சிவசண்முகம் பிள்ளையிடமிருந்து நாம், நல்லபணிக்கு ஊக்கத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

"நந்தன் சரித்திரம் தெரிந்திருந்தால் — அல்லது மறக்காதிருந்தால்-நான் நினைக்கிறேன்-'சிவசண்முகம் பிள்ளையவர்கள் தில்லை சபாநாயகருக்கு பணம் தருமாறு மக்களைக்கேட்டிருக்க மாட்டார்'—என்று!

'நந்தன் தில்லை செல்ல விரும்பியபோது, வேதியர், 'மாடு தின்னும் புலையா' என்று ஏசினர்; 'போகத்தான் வேண்டும்,' என்ற போது, 40 ஏகர் நிலத்தையும் பயிரிட்டுத் தரக் கோரினர்; நந்தன், 'நாளைப் போகாமல் நானிருப்பேனா,' என்று பாடி, ஆண்டவன் அருள் கிடைக்கப் பெற்று 40 ஏகர் நிலத்திலும் அன்றிரவே பயிர் ஏறியது; காலையில் அதைப்பார்த்த வேதியர், நந்தனின் பக்தியை உணர்ந்து, காலில் விழுந்து வணக்கம் செய்து, தில்லைக்கு அனுப்பி வைக்கிறார்; இதனை எல்லாம் தெரிந்தும், நந்தனின் பக்தியையும், அதன் பெருமையையும் கூறக் கேட்டும் தீட்சதர்கள் நந்தனைக் கோவிலுக்குள் நுழையவிட்டார்களா? நெருப்பு மூட்டியல்லவா நந்தனை அதில் இறங்கச் செய்தனர்? நந்தன் சோதியில் கலந்துவிட்டதாகவன்றோ புராணம் எழுதினர்? 'சோதியில் கலந்தான் நந்தன்,' என்றால் என்ன பொருள்? 'நெருப்பில் வெந்து மாண்டான்' என்று தானே பொருள்?

"'என்ன பக்திமானாயிருந்தாலும், மாடு தின்னும் புலையன் கோவிலுக்குள் நுழைவதா?'—என்று கேட்ட தீட்சதர்கள் வாழும் தில்லைக் கோவிலின் திருப்பணிக்குத்தான் சபாநாயகர், பொருள்தரக் கேட்டிருக்கிறார்; தமக்கும் 'சபாநாயகர்' என்று பெயர் இருக்கிறது — தில்லை நடராசாவுக்கும் 'சபாநாயகர்' என்று பெயர் இருக்கிறது—என்று இதைப் பேசி அவர், பூரித்துப் போனாரே தவிர,; தன் இனத்தவரான நந்தன் நெருப்பிலே தள்ளிப் பொசுக்கப்பட்ட இடம் தில்லை' என்பதை மறந்தே போனார்!

"அப்படிப்பட்ட சிவஷண்முகம் பிள்ளை, தனது சட்டசபைத் தலைவர் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதை மனதில் கொண்டு, அதற்கேற்றபடி தான் பேசுவார்; அவரிடமிருந்து நற்பணியிலீடுபட்டிருப்போருக்கு தொல்லைகளைத் தவிர, வேறென்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும்? நாம் செய்ய வேண்டியதெல்லாம், நமது ஆற்றல் படையினர்—அறிவுப்படையினர் —

(4-ம் பக்கம் பார்க்க)

'இலங்கையர் மயம்!'

இலங்கையில் பல வேலைகளிலும் இலங்கையரையே நியமிக்கும் 'இலங்கையர் மயத்' திட்டம் ஒரு நியாயமான காலவரம்பில் அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

எல்லா இலாகாக்களையும் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு அது பற்றிய விவரங்களை வகுத்து வருவதாகவும் அவர் கூறினாராம்.

மதகுருவுக்கா? மக்களுக்கா?

அரசியலில் ஆதிக்கம் யாருக்கு?

பியூனஸ் அயர்சில் சிக்கல் வளருகிறது

'பலகணிகள் தூளாக்கப்பட்டன; பூட்டிய கதவுகளை உடைத்தெறிய முயற்சிக்கப்பட்டன.'

'உதவி தேவை; உதவி தேவை' என, மாதா கோயில் மணி ஒலித்த வண்ணம் இருந்தது.'

'கத்தோலிக்க மத குருமார்களைச் சார்ந்தவர்களும்,அவர்களை எதிர்த்து, மத குருமார்களுக்கு ஆட்சிப் பொறுப்பில் ஆதிக்கம் இருத்தல் ஆகாது எனும் குடியரசுத் தலைவரின் ஆதரவாளர்களுக்கும் நடந்த மோதுதலில் மூன்று ஆண்களும், ஒரு பெண்ணும் காயமுற்றனர்.'

'போலீஸ், கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி கிளர்ச்சிக்காரர்களைக் கலைத்திருக்கிறது. நகரத்தின் பல பகுதிகளிலும் கவச வண்டியில் போலீஸ் சுற்றிக்கொண்டு இருக்கிறது.'

பியூனஸ் அயர்சிலிருந்து, இந்தத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஜுவான் பெரோன் என்பார் பியூனஸ் அயர்ஸ் குடியரசின் தலைவராவார்.

'ஆட்சிப் பொறுப்பு மக்களுக்கே இருத்தல் வேண்டும்,' என்பது அத்தலைவரின் குறிக்கோள்.

அதைச் செயலாற்றும் வகையில், ஆட்சிப்-பொறுப்பில் கத்தோலிக்க மத குருவிற்கு இருந்துவந்த ஆதிக்கத்தை, அண்மையில் வெட்டித் துண்டித்துவிட்டார், அந்தத் தலைவர்.

ஆதிக்கத்தை இழக்க விரும்பாத கத்தோலிக்க மத குரு, மதத்தில் பற்றுக்கொண்ட மக்களை குடியரசு தலைவருக்கு எதிராகத் தூண்டிக் கொண்டு இருக்கிறார்.

மதச் சார்பு கொண்ட மக்கள், பார்லிமெண்டு கட்டடத்தை முற்றுகையிட்டு, போப்பரண்டவர் கொடியை உச்சியில் பறக்கவிட்டனர்.

அதுவுமன்றி, 'லா பெரெஸ்கா' என்ற குடியரசுத் தலைவரின் சார்புடைய பத்திரிகை அலுவலகத்தின் பலகணிகளை உடைத்தெறிந்தனர் — மதப் பற்றுடைய மக்கள்!

இத்தாக்குதலின் எதிரொலியாகத்தான், மாதா கோயில் மீது படையெடுப்பு நேர்ந்திருக்கிறது.

மரண தண்டனை!

மேற்கு ஜெர்மன் இரகசிய நிறுவனம், அமெரிக்க இரகசிய நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த 7 'நேட்டோ ஏஜெண்டு'கள் மீது நடத்தப்பட்ட விசாரணையில், இரு ஜெர்மானியர்களுக்கு கிழக்கு ஜெர்மன் தலைமை உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து, தீர்ப்புத் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

உரம் தயாரிக்க புது வழி

டில்லியிலுள்ள ஆட்டுத்தொட்டிகளில் பாழாகிப் போகும் இரத்தத்திலிருந்து உரம் தயாரிக்கும் திட்டமொன்று பற்றி டில்லி மாநில சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறதாம்.

லீக் கரைகிறதா?

எல்லைப்புற மாநில முன்னாள் முதன் மந்திரி கான் அப்துல் கயூம் கான், முஸ்லீம் லீகிலிருந்து விலகி விட்டாரெனத் தெரிகிறது.

பாகிஸ்தான் மந்திரி சபையிலும் அவர் மந்திரியாயிருந்தவர்.

இராஜிநாமாவை அறிவித்து அவர் தந்துள்ள அறிக்கையில், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு அவர் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

லீக் சார்பில் தேர்தலில் நிற்க அவர் விண்ணப்பம் செய்திருந்தார்; ஆனால், அவருடைய விண்ணப்பத்தை மத்திய போர்டு நிராகரித்து விட்டதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—6—'55 செவ்வாய்

அங்கும்—இங்கும்

ஒரு நாட்டில் வாழும் அத்தனை மக்களும் உரிமையும், மதிப்பும் கூடிய வாழ்வு பெறுவதில் எந்தவித வேறுபாடுகளும் காட்டப்படாமலிருக்க வேண்டுவதுதான், நாகரீகமானது—நாணயமானது என்பதை உலகம் பொதுவாக ஒப்புக் கொண்டிருக்கிறது.

சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், மற்றப் பிரிவினருக்குக் கிடைக்கும் உரிமையும், மதிப்பும் பெருமல் வாழ்வது தன்மானத்தோடு கூடிய வாழ்வல்ல; அதே போல, பிற பகுதியினருக்கு நியாயமாகவே கிடைக்கவேண்டிய உரிமையை தட்டிப் பறித்து வைத்துக்கொண்டு, அவர்களை மதியாது நடந்துகொள்வது, மனிதப் பண்பல்ல—அநாகரிகமானது.

இது ஒரு சமூகத்தின் பல பகுதிகளுக்குமட்டும் பொருந்தக்கூடிய நியதியல்ல; தனி மனிதர் ஒவ்வொருவரும்கூட, தன் மதிப்பையும், தன்னுரிமையையும் போலவே பிற மனிதரின் உரிமையை உணரவும், அவர்களை மதிக்கவும் வேண்டுமென்பது அவசியமாகிறது. தனி மனித சுதந்திரத்திற்கு, இந்த 'பிறரையும் மதிக்கும் நோக்கு' தேவையான அடிப்படையாகும்.

ஆனால், பலப்பல முரண்பட்டதும், வேறுபட்டதும்-ஆனால் தொடர்ச்சியானதுமான காரணங்களால், இந்த நாட்டில் வாழ்வோரிடை பெரும்பாலும், பிறரையும் மதிக்க வேண்டும் என்ற உயர்நோக்கு இல்லாது போய்விட்டிருக்கிறது.

தனித் திறமை முதல், குலப் பெருமைவரை காரணங்களாகக் காட்டி, 'பெரிய மனித' வேடம் பூண்டு, 'தம்மைத் தவிர ஏனையோரை எதற்கும் அருகதை அற்றவர்கள்—தம்மிலும் அவர்கள் தாழ்ந்தவர்கள்,' என்ற எண்ணங்கொண்டவர்கள் எண்ணற்றோருண்டு, இந்த நாட்டில்!

பிறரை இழிவாகக் கருதி அவரின் உரிமையைப் பறித்து அவமதித்து நடப்போர், தாம் அவ்வாறு நடந்துகொள்வதற்காகக் காட்டும் காரணங்களில் மிகக் கொடியது, 'தம்குலப் பெருமை' என்ற காரணம்தான்!

'நாங்கள் உயர் குடிப் பிறந்தோர் — உயர் குலத்தோர்,' என்று கூறிக்கொண்டு, தம்மவர் அல்லாத ஏனையோரை, இழிந்தவர் என மொழிந்து, 'தமக்கு ஓர் சட்டம், பிறருக்கு ஓர் சட்டம்,' என்று ஆக்கிக் கொண்டு, அந்த நிலை நீடிப்பதில்தான் தம்மவரின் சுயநல சுகபோக வாழ்வு பொதிந்திருப்பதால், என்றென்றைக்கும் அந்த நிலை நீடிக்க வேண்டுமென விரும்பும் நாகரிகமற்றவர்களாக இந்த நாட்டு பார்ப்பனர்கள் இருந்து வருகின்றனர்.

என்றோ ஒரு காலத்தில் செய்யப்பட்ட சமூக ஏற்பாடுகள், கால மாற்றத்திற்கொப்ப—மக்கள் பெற்ற விழிப்புணர்வால் திருத்தியும், மாற்றியும் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன—உலகின் பல பகுதிகளிலும்!

பழைய சமூக ஏற்பாடுகளின் திருத்தத்திற்காகவும், மாற்றத்திற்காவும், உத்தமர்கள் பலர் தங்களின் வாழ்வையே அர்ப்பணித்திருக்கின்றனர். தொடர்ந்து புதிய ஏற்பாடுகளை ஆராய்ந்து, கண்டு, சமூகத்தின் மொத்த நன்மைக்கு ஆக்கம் தேடி வருகின்றனர்.

கால மாற்றத்தால் முளைக்கும் எண்ணற்ற புதிய ஏற்பாடுகளை அறிந்துகொள்ளவே வாய்ப்பற்றுக் கிடக்கும் மக்களுக்கு, அந்த மாற்றங்களைப் புரியவைத்து, ஏற்றுக் கொள்ளச் செய்து, அவர்களையும் தங்களோடு இழுத்துக் கொண்டு செல்வதில், முதலில் மாற்றம் பெற்ற மக்கள் முன்னோடிகளாயிருந்திருக்கின்றனர் - இருந்து வருகின்றனர் - உலகத்தில்!

'தனக்குக் கிடைக்கும் உயரிய வாழ்க்கை பிறருக்கும் கிடைக்க வேண்டும்—தான் அனுபவிக்கும் உரிமை பிறனுக்கும வேண்டும்,' என்ற உயரிய எண்ணங் கொண்டோரால் மட்டுமே, சமூகத்தில், அதன் முழு வளர்ச்சிக்கு ஒத்துழைக்க முடியாதவண்ணம் பின்தள்ளப்பட்டுக்கிடக்கும் மக்களையும், தங்களோடு 'ஓடிவர'ச் செய்ய முடியும்-தங்களோடு ஒன்றி வாழ வைக்க முடியும்!

அப்படிச் செய்யும் உயரிய எண்ணம்,உலகத்தையும் அதன் போக்கையும் ஓரளவேனும் உணர்ந்த வெள்ளை உள்ளங்களில் மட்டும்தான் இடம் பெற முடியும்.

அந்த எண்ணம் பலரிடை வளர்வதற்கான வாய்ப்பை—இயற்கையாகவே, சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், வாழ்க்கைத் துறையில் உயர்ந்திருப்பவர்களால் மட்டுமே பெற்றிருக்க முடியும்.

அந்த வாய்ப்பை, இந்த நாட்டுப் பார்ப்பனர் பெற்றிருந்தனர்—இன்னமும் பெற்றிருக்கின்றனர்.

இந்தப் பார்ப்பனக் குடிமக்களில் 100-க்கு 90 பேருக்கும் அதிகமானோர் உலகத்தை ஓரளவு உணர்ந்து கொள்ளும் அறிவுபடைத்தவர்கள்; அவர்களில்தான், 'தன்னைப் போல் பிறரையும் சமமாக நோக்கும்' பேருள்ளம் கொண்டவர்கள் நிரம்ப இருக்க வேண்டும்; ஆனல், அந்தோ! பரிதாபம்! அந்தப் பெருநோக்கு, பார்ப்பனச் சமுதாயத்தவரில் வெகு சிலரைத் தவிர ஏனையோருக்கு இல்லை.

'தாங்கள் பெற்றுள்ள மதிப்பும் உரிமையும் கூடிய வாழ்வினை பிறரும் பெறவேண்டும்,' என்ற எண்ணம் அந்தக் குடிமக்களுக்கு இருந்திருக்குமானல், இன்றைய திராவிடர் இயக்கத்தை 'அவர்கள்' அல்லவா, துவக்கி செயல்படுத்தி வந்திருக்க வேண்டும்? அது தானே, அந்தச் சமுதாயத்தவரை, 'நல்ல உள்ளம் கொண்டவர்கள்; நாகரிகம் தெரிந்தவர்கள்,' என்ற பெருமைக்கு ஆளாக்க முடியும்?

தீண்டாமை அனுசரிப்பது கூடாது,' என்பதற்காக ஒரு சட்டம், பல வைதீக, பழைமை, மத வெறியர்களின் மறைமுக — நேர்முகத் தாக்குதல்களினூடே — அந்த அவதிக்கு ஆளாக்கப்பட்டோருக்காக, திராவிடர் இயக்கத்தவரைப்போன்ற ஒரு சிலரும் தீவிரமாகப் போராடிய பிறகு, உருவாயிற்று; அதை விளக்க ஒரு சுவரொட்டி தயாரித்தது சென்னை அரசாங்கம்; 'இந்து' சீறிற்று; பார்ப்பனர் குதித்தனர்; தாழ்த்தப்பட்டுக் கிடப்பவரைத் தன் நிலைக்கு உயர்த்த வேண்டியவர்கள் - நாணயமானவர்களாயிருந்தால், அந்த உயர்த்தும் வேலையைத் தங்கள் கடமையாகக் கொண்டிருக்க வேண்டியவர்கள் - ஏனெனில், அவர்கள்தானே, அந்தப் பிறரைத் தாழ்த்தும் கொடும் நஞ்சைக் கொட்டியவர்கள் - சினந்து கொள்கின்றனர், சீறுகின்றனர்! இது, இங்கு!

பிரிட்டனில், கருப்பர்களுடன் இணைந்து வேலை செய்யவும், சாதாரண குடிமக்களுக்குத் தரவேண்டிய மதிப்பைத் தரவும் வெள்ளையர் மறுக்கும் நிற வேற்றுமை சில இடங்களில் அனுசரிக்கப்படுவதாகவும், அந்த நிலை கண்டு கலங்கிய பிரஜா உரிமைப் பாதுகாப்புக் கவுன்சில் நிற வேற்றுமை எதிர்ப்பு இயக்கம் நடத்தப் போவதாகவும் செய்தி வெளிவந்திருக்கிறது. கருப்பருக்குத் தர மறுக்கப்படும் மதிப்பையும் சம உரிமையையும் நிலைநாட்ட வெள்ளையர்கள் இயக்கம் நடத்துகின்றனர் - அங்கு!

ஆனல், இங்கு? தாங்கள் தேடித் தராவிட்டாலும், இழந்தவர்கள் தாங்களாகவே போராடிப் பெற்றுக்கொள்வதுகூடப் பொறுக்கவில்லை—பார்ப்பனர்களுக்கு!

'அங்கும் இங்கும்' அறிவுபடைத்தோரின் மனநிலை அப்படி தலை கீழாயிருக்கிறது; என்ன செய்வது?

கூட்டுறவு முறையில் கைத்தறி நெசவு

திட்டங்கள் பற்றி விளக்கம்

சென்னை, ஜுன் 12—

ஆண்டுதோறும் 30,000 தறிகள் வீதம் மேலும் ஒன்றரை இலட்சம் தறிகளை கூட்டுறவு அமைப்புக்குள் கைத்தறி நெசவாளர் நிலை உயர்வுக்கென கொண்டுவரப்படும் என்று தெரியவருகிறது.

தற்போது ஒன்றரை இலட்சம் தறிகள் கூட்டுறவு முறையில் இயங்குகின்றன.

நெசவாளருக்கென 15 வீட்டு வசதித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டுகளில் 1,500 வீடுகள் அமைக்கப்படும்.

ஆண்டிற்கு இரண்டு வீதம் 10 கைத்தறித் தொழிற்சாலைகளும் அமைக்கப்படும்.

சேலம்மாவட்டத்தில்ஐந்து சவ்வரிசி உற்பத்திசாலைகள்

சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி உற்பத்திக்கான 5 கூட்டுறவு சங்கங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

நாள் ஒன்றுக்கு, 10 முதல் 15 மூட்டைகள் (மூட்டை ஒன்றுக்கு 205 ராத்தல்) உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையொன்றுக்கு ரூ. 30 ஆயிரம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மரவள்ளி உற்பத்தியாளர் நலனுக்காக இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதாம்.

பஞ்சாப் மந்திரியின் மீது லஞ்சக் குற்றம்?

'பிரிட்டிஷ் போக்கில் முடிவுகட்டி இருக்க வேண்டும்'

டாக்டர் குன்சுருவின் ஆணித்தரமான வாதம்

'பஞ்சாபில் காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவரான ஜெகத்நாராயணன் மீது தீவிரமான இலஞ்சக் குற்றங்கள், சட்ட சபையில் வெளிப்படையாகச் சுமத்தப்பட்டன. எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மட்டுமேயல்லாது காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் கூட, மேற்படி குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

'குற்றப் பட்டியல் எழுத்து மூலம் முதல் மந்திரியிடம் தரப்பட்டது.

"குற்றங்கள் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முதல் மந்திரி சட்ட சபையில் வாக்களித்தார்.

"எச்சரிக்கையாக குற்றப்பட்டியலை, முதல் மந்திரி ஆராய்ந்தார்; அத்துடன் நில்லாமல், குற்றப்பட்டியலை காங்கிரஸ் மேலிடத்திற்கும் அனுப்பிவைத்தார்"

இவ்விவரங்களைக் கூறிவிட்டு, இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவரான டாக்டர் இருதய நாத் குன்சுரு அவர்கள், மேலும் பொருத்தமான ஐயப்பாடுகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஒரு அரசாங்க சம்மந்தமான ஏடுகளை, வேறு ஒரு வெளி அமைப்பிடம் ஒப்படைப்பது முறையாகுமா? ஆகாதா?—என்பது வேறு ஒரு பிரச்சினையாகும். அது தனித்த வகையில் கருதப்பட வேண்டும்.

"குற்றச்சாட்டு முடிக்கப்பட்ட போக்குபற்றித்தான் நான்பெரிதும் கவலுறேன். பிரச்சினையில் செலுத்தப்பட்டுள்ள கருத்தைக் காட்டிலும் மேலும் அதிகமான கருத்து செலுத்தப்பட்டிருக்க வேண்டும். வேறு ஒரு நடைமுறையைக் கொண்டு, மேற்படி பிரச்சினை ஆராய்ந்து, முடிவு கட்டப்பட்டிருக்கவேண்டும்.

"குறிப்பிட்ட ஒரு பிரிட்டிஷ் அமைச்சர் சட்டத்துக்குப் புறம்பாக இலஞ்சம் வாங்கினதாக, பிரிட்டிஷ் வியாபார நிறுவன அதிகாரிகள், நிறுவனத் தலைவரிடம் குறை கூறினர். இச்சம்பவத்திலுள்ள ஒரு முக்கியத்துவத்தை நாம் கவனிக்கவேண்டும்; அதாவது, இந்தியாவில் இருக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு, அமைச்சர்களுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டக் கூடிய நெஞ்சுத் துணிவு இன்று இருக்கிறதா என்பதே அம்முக்கியத்துவமாகும்.

"பிரிட்டிஷ் வியாபார நிறுவன அதிகாரிகளிடமிருந்து குறை கிளம்பினதும், நிறுவனத்தின் தலைவர் பணியாற்றத் தொடங்கினர். அன்று பிரதமராக இருந்த அட்லி, 'ஒரு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டு, மந்திரி மீது கூறப்பட்டுள்ள குற்றம் ஆராயப்படும்,' எனப் பார்லிமெண்டில் அறிவித்தார். அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலும், அதை முழு மனதுடன் ஆதரித்தார். 'அவநம்பிக்கையிலும், சந்தேகத்திலும் மக்களாட்சிவாழமுடியாது,' என்ற காரணங்காட்டி, 'ஒரு நாட்டின் நிர்வாகம் பழிப்புக்கு இடமின்றி கண்டிப்பாக இருந்தாக வேண்டும்,' என அட்லி, ஆய்வுக் குழுவை நியமித்ததற்கு விளக்கமுரைத்தார். இப்போக்கை பஞ்சாப் அரசாங்கமும், இந்தியப் பேரரசும கருத்தூன்றி கவனித்துப் பார்க்கவேண்டும்.

"இதே பிரிட்டிஷ் போக்கை பின்பற்றி பஞ்சாப் அரசாங்கமும் நடந்துகொண்டிருக்கவேண்டும். தனது சட்டத் தலைவரையும், இந்தியப் பேரரசின் சட்டத் தலைவரையும் கலந்து பேசி, அதன் பிறகு அவசியமென ஏற்பட்டால், ஒரு ஆய்வுக் குழுவை பஞ்சாப் முதல் மந்திரி நியமித்திருக்கவேண்டும்.

"குற்றச்சாட்டிற்குள்ளான அமைச்சர் குற்றமற்றவராகஇருக்கலாம்; அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களும்ஆதாரமற்றவைகளாக இருக்கலாம்.

"நிர்வாகத்தின் புனிதத்திற்காகவும், மக்களாட்சியின் நலத்திற்காகவும் பிரஸ்தாபக் குற்றச்சாட்டை ஆராய ஒரு ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். அதனுல், அரசாங்கத்தில் மக்களுக்குள்ள அவநம்பிக்கை நீங்கி, நிர்வாகத்தில் நல்ல நம்பிக்கை பிறக்க வழி ஏற்பட்டிருக்கும்."

வீட்டு வசதிக்கான கூட்டுறவு சங்கங்கள்

2-வது ஐந்தாண்டுத் திட்டப்படி அமைக்கப்படுமாம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்படி 25 நகர வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்கள் நிறுவவும், இதன் மூலம் 2,660 வீடுகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் 240 கிராம வீட்டு வசதி சங்கங்கள், 10 தொழிலாளர் வீட்டு வசதி சங்கங்கள், தாழ்த்தப்பட்டோருக்கென 500 சங்கங்கள் துவக்கவும் எண்ணப்படுகிறதாம்.

இவற்றின் மூலம் முறையே 3600, 2000, 10000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கின்றதாம்.

பால் சுத்திகரிப்பு சாதனங்கள்

சென்னை, ஜுன் 12—

சேலம், மதுரை, சீரங்கம், வேலூர், உதகை, கள்ளிக்கோட்டை, கொடைக்கானல், விருதுநகர், கோவை ஆகிய நகரங்களில் உள்ள பால் வினியோக சங்கங்கள், பாலில் கிருமி நாசச் சாதனங்கள் அமைக்கும் எனத் தெரிகிறது.

சென்னை பால் வினியோகச் சங்கம் சோடம்பாக்கத்தில் அவ்வித சாதனங்களை அமைக்கும்.

கறவை மறந்த மாடுகள் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ஒரு கூட்டுறவு சங்கம் அமைக்கப்படும். 5 ஆண்டுகளில் 5 சங்கங்கள் நிறுவ யோசிக்கப்படுகிறது.

கர்நூலுக்கு ஒரு விமான நிலையம்

ஆந்திர மாநிலத் தலைநகரான கர்நூலுக்கருகில், தேவையான இடம் கிடைத்தவுடன், ஒரு விமான நிலையம் கட்டப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்காக ரூ. 12 இலட்சம் செலவாகுமென்றும், டகோடா, வைகிங் முதலிய விமானங்கள் இறங்க வசதியுள்ளதாயிருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறர்.

'ஐரோப்பிய அழகி'

ஹெல்சிங்கி, ஜுன் 12—

பின்லாந்தைச் சேர்ந்த மிஸ் இண்டா பிரிட்கோடர் பரோ ஐரோப்பிய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தப் பெண்மணிக்கு 20 வயதாகிறதாம்.

துருக்கியைச் சேர்ந்த குணு சோலே இரண்டாவதாகவும், மானிக் லாம்பர்ட் மூன்றாவதாகவும் அழகிகளெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

போட்டியில், 13 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்துகொண்டனராம்.

உத்தமர்கள் யார்? உலகைத் திருத்தியவர் எவர்?

பூந்தமல்லி சிறப்புக் கூட்டத்தில் அண்ணு தந்த கருத்துரை

"பல கண்டங்களேயும், பல் கோடி மக்களேயும் கொண்ட பரந்த உலகில், 'உத்தமர் யார்?' என்று ஆராய்வோம்; பசியால் வாடும் ஒருவருக்கு இரண்டணு கொடுப்பவர் உத்தமர்; அதே உத்தமர், தம் தொழிலில் கொள்ளை இலாபம் அடிக்கக்கூடும்—ஒரு படி அரிசியில் வீசம்படி கல்லும் மண்ணும் கலந்து விற்பனை செய்து இலாபம் அடையக்கூடும்; மற்ருெருவர், கால் முடமான ஒருவருக்கு ஒரு கம்பு உதவக்கூடும்—நொண்டியின் வாயால், 'உத்தமர்' என்று அவர் புகழப்படவும்கூடும்; ஆனுல், அதே நொண்டிக்கு கம்பு வழங்கியவர், ஒரு குடும்பத்தின் சொத்துக்களேயே மோசம் செய்திருக்கக்கூடும்; எனவே, 'உத்தமர்' என்பவர் ஒருவரால்—உதவி பெற்றவரால் புகழப்படுவதைக் கொண்டே, அவரை, உத்தமராகக் கருதிவிட முடிவதில்லை; அப்படியானுல், 'உத்தமர்களே நம் நாட்டில் தோன்றவில்லையா? எல்லோருமே பாவிகளா?'—என்று கேட்கத் தோன்றும்; 'மகான்கள்; ரிஷிகள், யோகிகள், சித்தர்கள், ஞானிகள்—இவர்கள் எல்லாம் உத்தமர்கள் இல்லையா?' — என்றும் கேட்கவும் தோன்றும்;

"மகான்கள், ரிஷிகள் கடுந்தவம் செய்தார்கள்—ஊசி முனையில் நின்று தவம் செய்தனர்; நீரில் மிதந்து கொண்டே தவம் செய்தனர்; தீயில் நின்று தவம் செய்தனர்; தலைகீழாக நின்று தவம் செய்தனர்; பல ஆண்டுகள் உணவு அருந்தாமலே—காற்றை மட்டும் புசித்துக் கடுந்தவம் செய்தனர்; 'எதற்காகச் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? செய்ய முடியுமா?'—என்ற ஆராய்ச்சிகூட நமக்கு வேண்டாம்—'செய்திருக்கலாம்' என்றே ஒப்புக்கொண்டு பாருங்கள்; இந்தத் தவங்களால் கண்ட பலன் என்ன?

"தவத்தை மெச்சி சிவன் தோன்றினுர்; மகாவிஷ்ணு தோன்றினுர்;—'உமது தவத்தைக் கண்டு மெச்சினேம்; உமக்கு என்ன வேண்டும்?'—என்று அவர்கள் கேட்டார்கள்; தவம் செய்த ரிஷிகளோ, 'எல்லாம் வல்ல இறைவனே! உனது பக்கத்தில் எனக்கு இடம் தாரும்; பிறவாவரம் தாரும்; இந்திரலோக பதவியைத் தாரும்; என் சாபம் பலிக்க வரம் தாரும்; நான் எதைத் தொட்டாலும் பொன்னுக வேண்டும் என்ற வரம் தாரும்; பொல்லாத அரக்கரை அழிக்க வரம் தாரும்,'—என்றெல்லாம் கேட்டார்கள் என்றுதான் நாம் படித்தோமே தவிர, உலக மக்கள் முன்னேற்றம் கருதியோ, நாட்டில் பஞ்சமில்லாதிருக்கவோ, பட்டினியால் மக்கள் சாகாமலிருக்கவோ, அடிமைத் தனத்தில்—அஞ்ஞானத்தில் மக்கள் மடியாதிருக்கவோ, மக்கள் நோயால் அகால மரணமடையாமலிருக்கவோ, மக்கள் வாழ்க்கையில் இன்பம்—சாந்தி—அன்பு—அறிவு தழைக்க வேண்டுமென்ருே, ஒரு நாட்டை ஒரு நாடு அடிமைப்படுத்தக்கூடாதென்ருே அவர்கள் வரம் கேட்டதில்லை; தங்களுடைய தவ வலிமை தங்கட்கு மட்டுமே புகழ் தரவேண்டுமென்று எண்ணிய அவர்களை—மக்கள் நலம், பொதுநலம் ஆகியவற்றைக் கருதாத அவர்களை 'உத்தமர்கள்' என்று நாம் எவ்வாறு கூறுவதற்கு இயலும்?

"உலக மக்கள் நலம் கருதி பணி புரியும் நல்லவர்களே உலகை திருத்திய உத்தமர்கள் ஆவார்கள்; மற்றவர்கள், சுயநலம் கொண்டோர் ஆவார்."

—இவ்வாறு, 12—6—55 காலை 10-மணிக்கு பூவிருந்தமல்லி விக்னேசுவரா டாக்கீசில், தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்காக தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில், 'உலகத்தைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் பேசிய தோழர் அண்ணுதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"ஊராண்மைக் கழகத்தார் சார்பில் வரவேற்பு மடல் வாசித்துக் கொடுத்த தோழர், பல ஆண்டுகட்கு முன்னர், பூந்தமல்லி பள்ளியில் நான் பேசவந்த சமயம் பலத்த எதிர்ப்புகள் இருந்ததைக் குறிப்பிட்டு, இன்றைய வளர்ச்சியையும் குறிப்பிட்டார்.

"இன்று எதிர்ப்பாளர்களுக்கு பெருந்தன்மை ஏற்பட்டுவிட்டதென்றே கூறவேண்டும்; அவர்களும் நம் கொள்கைகளைக் கேட்கபடிப்படியாக வந்துகொண்டிருக்கிருர்கள்.

"நான் இன்று உங்கள் முன்னிலையில் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் பேசுவதாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். இன்று நான், 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' எல்லோரைப் பற்றியும் இங்கு எடுத்துக் கூறிவிட முடியாது; உலகைத் திருத்திய உத்தமர்கள் பற்றிய வரலாற்றைக் கூறும் ஏடுகள் பல உண்டு; அவற்றைக் கற்கவும், கேட்கவும் உங்கட்கு ஆர்வம் ஏற்படும்படி எனக்குத் தெரிந்த ஒரு சில உலக உத்தமர்களைப் பற்றி மட்டுமே இங்கு நான் பேசப்போகின்றேன்; நான் பேசும் தலைப்பில் இரு வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்—ஒன்று, உத்தமர்; இரண்டு, உலகம்—என்பதை!

"நம் நாட்டிலுள்ள மதவாதிகள், புராணிகர்கள், பெரியோர்கள் எல்லோரும் தங்கள் நாட்டு எல்லைக்கப்பால்—இமயமலை சிகரத்திற்கு மேல் 'வேறு நாடுகள் இல்லை' என்றே முடிவு செய்துகொண்டார்கள்; தங்கள் நாட்டை—தாங்கள் வாழும் பகுதியையே 'உலகம்' என்று கருதுகிருர்கள்; இமயமலை சிகரத்துக்கு அப்பால்—பரந்த கடலுக்கு அப்பால் வேறு நாடுகள் இருக்க முடியாதென்றே நம்பினுர்கள்; 'மேலே ஏழு லோகம்—கீழே ஏழு லோகம்—நடுவில் பூலோகம்,' என்ற புராணக் கதைகளைத்தான் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

"தேவாரத்தில் — திருவாசகத்தில் உருக்கமான பாசுரங்கள் இருக்குமே தவிர, ஐரோப்பா நாட்டைப் பற்றியும், ஜெர்மனியைப் பற்றியும், அமெரிக்காவைப் பற்றியும், ரஷ்யாவைப் பற்றியும் ஒரு வார்த்தைகூட காண முடியாது. நமது புராண—இதிகாச ஏடுகளிலும் இருக்காது; இருந்தால் 'தேவ லோகம், இந்திர லோகம், கைலாசம், வைகுண்டம், நாகலோகம்'—பற்றிய கற்பனைகள் தானிருக்குமே தவிர, மக்கள் வசிக்கும் பரந்த உலகத்தைப் பற்றிய விளக்கங்கள் எதுவும் இருந்ததில்லை.

"நம் நாட்டைப் போலவேதான் ஐரோப்பா நாட்டவர்களும், போப்பாண்டவர்களும், பாதிரிமார்களும், 'ஐரோப்பா நாட்டைத் தவிர வேறு நாடுகள் இல்லை,' என்றே வாதிட்டார்கள்; 'உலகம் தட்டை' என்றே முழங்கினுர்கள்; 'உலகம் உருண்டை' என்பதை மெய்ப்பிக்க பூகோள அறிவையும், 'உலகைச் சுற்றிப் பல்வேறு நாடுகள் இருக்கிறது,' என்பதையும் விஞ்ஞான அறிவின் துணைகொண்டே அறிய முடிந்தது.

"கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், ஐரோப்பிய நாட்டவர், 'அமெரிக்கா என்றுஒரு நாடு உண்டு,'என்பதை ஒப்புக்கொள்ளவே மறுத்தனர்; பூகோள அறிவு வளர்ச்சி மக்களிடை பரவிய பின்னர்தான் தாம் வசிக்கும் நாடு—நிலப்பரப்பு மட்டுமே உலகம்,'—என்ற கருத்து பொய்யாகிவிட்டது.

"பிற நாட்டில் தோன்றிய 'உத்தமர்கள்,' கடும் தவம் செய்யவில்லை; பரமசிவன்—பார்வதியைக் காணவில்லை; மகாவிஷ்ணு-லட்சுமியைப் பார்க்கவில்லை; என்ருலும், மக்கள் நலன் கருதி பல பல வசதிகளைச் செய்து தந்திருக்கிருர்கள்; விஞ்ஞான அறிவை வளர்த்திருக்கிருர்கள்; 'உழைப்பால் முன்னேற்றம் காணலாம்', என்ற உறுதி கொண்டதின் பலனுக மின்சார விளக்குகளையும், ரயில், விமான வசதிகளையும், ஒலி பெருக்கி, டெலிவிஷன் போன்ற கருவிகளையும், தந்தி, தபால் போன்ற வசதிகளையும், அச்சு இயந்திரங்களையும் கண்டுபிடித்து மக்களுக்குப் பயன்பட உதவியிருக்கிருர்கள்;

"மக்கள் நலன்கருதி, உழைத்து நற்பயன்களை உண்டாக்கிய உத்தமர்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதில்லை; ஆர்வம் ஏற்பட்டதில்லை; 'இவைகள் எல்லாம் அற்பக் காரியம்' என்று மக்கள் அலட்சியமாய்ப் பேசுவார்கள்; ரயிலில் ஏறிச் செல்வார்கள்—மலை உச்சியிலிருக்கும் முருகக் கடவுளைப் பற்றி—அவர் திருவிளையாடல் பற்றி பேசிக் கொண்டு செல்வார்களே தவிர, 'இரயில் வசதிகளைக் கண்டுபிடித்த உத்தமர் யார்?' என்று விவாதிக்க மாட்டார்கள். 'தசரதர் காலத்தில் தபால்-தந்தி இல்லையே; இன்று நமக்கு அந்த வசதிகள் வேண்டாம்,' என்று அவர்கள் விட்டார்களா? இல்லையே! தபால் கார்டை வாங்கி, அதில் 'ஸ்ரீராம ஜெயம்' போட்டு அனுப்பி வைக்கிருர்கள்.

"இராமாயண காலத்தில் தபால்-தந்தி வசதிகள் இருந்திருந்தால், 'சீதையைக் காணேம்,' என்றவுடன், மிதிலைக்கும், அயோத்திக்கும் இரண்டு 'எக்ஸ்பிரஸ்' தந்திகள் கொடுத்து, 'சீதை வந்தாளா?' என்று கேட்டிருக்கலாம்; பதில் வந்திருக்கும்; தபால்-தந்தி வசதி இல்லாத காரணத்தால்தான், அவதார புருஷனுன இராமன், சீதையைக் காணுமல் தவித்து அழுதான்போலும்! காட்டிலுள்ள மரங்களைப் பார்த்தும், மான் கூட்டங்களைப் பார்த்தும், குரங்குக் கூட்டங்களைப் பார்த்தும், 'எனது அருமை சீதையைக் கண்டீர்களா?' எனக் கேட்டு, பரிதவித்து அழுதான், இராமன்!"—என்றெல்லாம் கம்பரும், வால்மீகியும் பாடியிருப்பதாகப் படிக்கின்ருேம் அந்தக் காலத்தில் அவதார புருஷன் பட்டபாடு தபால்-தந்தி வசதியில்லாத காரணத்தால்தான் என்பதை அறிய முடிகிறது; ஆனுல், இன்று, சாதாரண மக்கட்கும் அந்த வசதிகள் கிடைத்திருக்கிறது

"நமது வயோதிகர்கள் இருவர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு பேசுவதைப் பார்க்கலாம்—'வயது இருபதுகூட ஆகவில்லை; இதற்குள் கண்ணுக்குக் கண்ணுடி போட்டிருக்கிறன்; காலம் கெட்டுப் போச்சு,' என்பார்கள். 'எனக்கு வயது 76; கண்ணுடியே போடவில்லை,' என்றும் கூறுவார்கள்; அந்தக் காலத்தில் படிக்கும் வசதிகள் குறைவு; ஏட்டுச் சுவடியை வைத்துக்கொண்டு ஒருவர் படிப்பார்—மற்றவர்கள் கேட்பார்கள்; அந்தக் காலத்தில் கண்கட்கு அதிர்ச்சி தரும் வேலைகள் இல்லை; படிக்கும் வேலையுமில்லை; கண்களுக்கு ஏற்பட்ட நலிவைப் போக்க கண்ணுடி போட்டுக்கொள்ளும் வசதிகளுமில்லை; கண்ணுடி போட்டுக்கொள்ளும் வசதி அன்று இருந்திருந்தால், 'பாரதக்' கதையே நடைபெற்றிருக்காதே! கண் குருடாகயிருந்த திருதராஷ்டிரனுக்கு கண் நோய் பார்த்து, மூக்குக்கண்ணுடியும் போட்டிருந்தால், துரியோதனன் கொடுமைகளும் வளர்ந்திருக்காது; பாரதமும் நீண்டிருக்காது. இன்று, இளமையில் கண்நோய் ஏற்பட்டால் அதை நீக்கி, கண்ணெளி கெடாமல், பார்வை குன்ருமலிருக்கக் கண்ணுடி வசதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"'விஞ்ஞான அறிவு என்று சொல்லி, இரயில், கப்பல், தந்தி—தபால், ஒலி பெருக்கி, மின்சாரம் ஆகியவைகளைப் புகழ்வதில் பயன் ஒன்றுமில்லை; இவைகளைவிட, மதம், கடவுள் நெறி, மோட்சம், சன்மார்க்க நெறி, ஒழுக்கம், அன்பு ஆகிய உயர்ந்த உத்தமக் கொள்கைகள், நம் நாட்டில்தான் உண்டு; பிற நாட்டில் உயர்ந்த நெறி முறைகள் இல்லை; என்று கூறத் தோன்றும்.

"மதவாதிகள், சமயவாதிகள், புராணிகர்கள் கூறும் கூற்றுப்படி, கொலை—களவு—கள் — காமம்—கோபம் ஆகிய பஞ்சமா பாதகங்கள் இன்று நம் நாட்டில் கூடியிருக்கிறதா—குறைந்திருக்கிறதா?

"கடவுள் பக்தி — மத பக்தி என்ற பெயரால் மூட நம்பிக்கைகள், குருட்டுப் பழக்க வழக்கங்கள், வர்ணுச்சிரமக் கொள்கைகள், புராணக் காலட்சேப வயிற்றுப் பிழைப்பு முறைகள், உழைத்த மக்களை, உழையாதவர்கள் வஞ்சிக்கும் ஏமாற்று முறைகள் அதிகம் வளர்ந்திருக்கிறதா — குறைந்திருக்கிறதா?

"நம் நாட்டில் தோன்றிய உத்தமர்கள் குண்டூசி செய்யும் அளவுக்குக்கூட பிற நாட்டை எதிர்பார்க்கும் அளவுக்கே இந்த நாட்டில் அறியாமையை அதிகம் வளர்க்கப் பாடுபட்டிருக்கிருர்கள்; அறிவு வளர, விஞ்ஞானம்வளர அவர்கள் பணியாற்றவில்லை.

"விசுவாமித்திரர் என்ற ரிஷிக்கு, அரிச்சந்திரன் என்ற அரசர் யாகம் செய்ய பொருள் கொடுக்க இசைந்தார்; யானை மீது நின்று கல்வீசும் உயரத்திற்கு தங்கம் தரும்படி அந்த ரிஷி கேட்டார் என்ருல், அதற்குப் பொருள் என்ன? அரசனை ஆட்டிப்படைத்தார் என்றுதானே அர்த்தம்?

"அரிச்சந்திரன் — நாட்டையும், அரசப் பொக்கிஷங்களையும் கொடுத்தும் ரிஷிக்குத் தந்த வாக்குறுதி அளவுப் பொருள்தர இயலாமையால், மனைவியை விற்றும், சுடுகாட்டில் சுடலை காத்தும், தாம் பெற்ற குழந்தையையே காலால் உதைத்துத் தள்ளும் நிலைமையில் மாறினுர் என்ற கதையைப் படித்தால்—இவைகள் மூலம் அறிவு வளர்ச்சி பெற முடியுமா? அடிமைத்தளை அறுபட முடியுமா? மக்கள் முன்னேற்றமடைய முடியுமா?

"பகுத்தறிவுப் பணியாற்றிய உத்தமர் சாக்ரடீஸ் என்ற அறிஞர், 'அன்பு என்ருல் என்ன? அறிவு என்ருல் என்ன? அழகு என்ருல் என்ன?—என்பவைகளை ஆராய்ச்சிக் கருத்துடன் நோக்கு; எதையும் கண்களை மூடிக்கொண்டு பின்பற்ருதே; 'ஏன்?'—என்று கேட்டு தெளிவு பெறு', என்று முழங்கினுர். 'மனிதன் அறிவுடையவனுக வாழவேண்டும்', என்ற கருத்துடன் பணியாற்றிய அவருக்குப் பரிசாக—அவர் வாழ்ந்த நாட்டு அரசு, நஞ்சு கொடுத்து அவரைக் கொன்றது.

'மதக் கருத்துக்களில் மடமையைப் புகுத்தாதீர்கள்,' — என்று கூறிய மார்ட்டின் லூதரைக் கொடுமைப்படுத்தினுர்கள்.

"முதலில் அறிவுக் கொள்கைகளைக் கூறிய அத்தனை பேரும், கொடுமைக்கும், அடக்குமுறைக்கும், சாவுக்கும் அஞ்சாமல், துணிவுடன்—மகா உறுதியுடன் மக்களிடையே அறிவைப் பரப்பினுர்கள்; அறிவு வழி நின்று விஞ்ஞானத் துணை கொண்டு மக்களின் உடல் உழைப்பு குறைய, நாட்டிற்கான தேவைகள் வசதியாகக் கிடைக்க பல அரும் சாதனங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் தங்கள் வாழ்நாளை தியாகம் செய்தார்கள்.

மக்கள் நலத்திற்குப் பணியாற்றிய உலக உத்தமர்களைப் பற்றி, வரலாற்று ஏடுகளைப் படித்து உணரலாம்; படிக்கும் வாய்ப்பில்லாதவர்கட்கு தி. மு. கழகத் தோழர்கள் பிரச்சார வாயிலாக 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' வரலாற்றை விவரித்துக் கூறலாம்.

"காலட்சேபங்கள் நடைபெறும் நகரங்களிலும், கிராமங்களிலும் நம் அறிவுப் பிரச்சாரம் அதிகம் பரவுவதற்குக் கழகத் தோழர்கள் பணியாற்றுதல் வேண்டும்.

"எல்லா நாட்டு மக்களைவிட நம் நாட்டு மக்கள் அதிகம் உழைக்கிருர்கள்; ஆனுல், 'உழைப்பின் பலனை அவர்கள் அடையவில்லை,' என்பதை எல்லா அரசியல் கட்சியினரும் ஒப்புக்கொள்கிருர்கள். உழைப்பின் பலனை உழைத்த மக்கள் பெற—பிறவியின் காரணமாகத் தீண்டாத மக்கள் என்ற இழிநிலைமை போக்க—அறிவு வளர—நம் நாட்டுச் செல்வங்கள் பிறரால் சுரண்டப்படாமல் பாதுகாக்க—நம் நாட்டில் தொழில் வளம் பெற—நாம் பணியாற்றுதல் வேண்டும்."

'ஒரே வகையான, சமமான வேலை செய்யும் ஆண் பெண் தொழிலாளருக்கு சரிசமமான சம்பளம் தர வேண்டும்,' என்ற கொள்கையை தொடர்ந்து அமுல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

முன்னுள் பொதுச்செயலாளர்

அண்ணுதுரை அவர்கள் வருகை

முன்னுள் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணுதுரை அவர்களிடம், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதி வசூலாகியுள்ள தொகையைப் பொதுக்கூட்டத்தில் கொடுக்க விரும்புவதாயும், தங்கள் மாவட்டத்தில் உடனடியாக சுற்றுப்பிரயாணம் செய்ய தேதி தரும்படியும் கடிதம் எழுதியிருக்கிருர்கள்; மிகவும் மகிழ்ச்சி.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அன்புடன் வாக்களித்தபடி நிதி வசூல் செய்திருக்கும் தொகையை உடனே பொதுச் செயலாளர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைத்து தோழர்கள் கடிதம் எழுதினுல், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு நாட்களுக்கு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தி வெளியிடப்படும்.

தனித்தனி ஊர்கட்கு தோழர்கள் அழைப்புகள் அனுப்பாமல், தங்கள் மாவட்ட செயலாளருடன் கலந்து பேசி பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்க—மாவட்டச் செயலாளர் அவர்கள் மூலம் இங்கு செய்தி அனுப்ப வேண்டுகின்றேம்.

ஜூலை மாதம் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் ஆரம்பமாகலாம்.

இராயபுரம், சென்னை-13, 7—6—'55. —பொறுப்பாளர், தி. மு. கழகம், தலைமை நிலையம்

இளைஞர்களின் கடமை உணர்வு

ஒரு பெண்மணியின் வாழ்வு பாழாகும் நிலை கண்டு கொதிப்பு

தர்பங்காவிலுள்ள ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மார்வாரிப் பெண்ணுக்கும், முசாபர்பூர் நகரைச் சேர்ந்த தாரமிழந்த ஒரு நொண்டி மார்வாரிக்கும் நடைபெற இருந்த திருமணத்தை நிறுத்துவது காரணமாகப் பலமான போலீஸ் காவல் நிறுத்தப்பட்டு இறுதியில் திருமணம் நடைபெறாமற்போய்விட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

இளம் பெண்மணியை ஒரு தாரமிழந்த நொண்டிக்குத் திருமணம் செய்வித்து, அவரது வாழ்வைப் பாழ்படுத்தக் கூடாது என்று கோரி, அங்குள்ள மார்வாரி இளம் வாலிபர்கள் திருமண ஏற்பாட்டை எதிர்த்து அப்பெண்மணியின் உறவினரிடமும், பெற்றோரிடமும் கேட்டுக் கொண்டனராம். அவர்களது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாத அப்பெண்ணின் பெற்றோர் திருமணத்தை நடத்தியே தீருவதென முடிவு செய்து திருமண நாளும் நிச்சயித்தனர். இதற்கிடையில் மேற்படி வாலிபர்களனைவரும் ஒன்று திரண்டு, அப்பெண்மணியின் சார்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடி மனுச் செய்து கொண்டனர்.

இந்தத் திருமணத்தை நிறுத்தினால், தானே அப்பெண்ணை மணந்துகொள்ளத் தயாரெனவும் ஒரு மார்வாரி கோடீசுவர இளைஞர் முன்வந்தாராம்!

திருமண நாளன்று 200 மார்வாரி இளைஞர்கள் ஒன்றுகூடி திருமணத்தை நடைபெற விடுவதில்லை என முடிவு செய்தனராம்; இதனால் இருதரப்பினரிடையேயும் ஆத்திரம் ஏற்பட்டு, நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைந்ததாம்!

நிலைமையைச் சமாளிக்கப் போலீசார் தலையிட்டதுடன், திருமணமும் நடைபெறாமற்போய்விட்டதாம்; ஊர்வலம் வந்த மணமகன் வீட்டினரும் திரும்பிச் செல்ல நேர்ந்ததாம்!

கோவா விடுதலை: நேருஜி கருத்து

இந்தியத் தொண்டர் கழகத் தலைவரான பண்டித இருதயநாத் குன்ஸ்ரூ, கழகத்தின் 50-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவிலிருந்து வெள்ளையர் வெளியேறிய பின், காலனிக் கொள்கை ஒரு அராஜகக்கொள்கை எனக் கருதப்படுகிறது; இந்திய மண்ணில் அந்த காலனிக்கொள்கை நிலவுவதை, இந்தியா அனுமதிக்க முடியாது.

"இன்று கோவாவில் நிலைமை எவ்வளவு நெருக்கடியாயிருந்த போதிலும், கோவா, சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியாவது உறுதியானதாகும்."

மோட்டார் பந்தயம்

பலரின் உயிரைக் குடித்தது

லேமான்ஸ், ஜூன் 13—

வட பிரான்ஸ் பகுதியில் நடைபெற்ற மோட்டார் பந்தய ஓட்ட நிகழ்ச்சியின்போது, இரண்டு வண்டிகள் ஒன்றையொன்று மோதிக்கொண்டதின் விளைவாக, வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்தவர்களில் 77 பேர் மரணமுற்றனர் என்றும், மற்றும் 77 பேர் படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்கள் என்றும், அவர்களில் பெரும்பான்மையினர் உயிர் பிழைப்பது கடினம் என்றும் செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

மேற்படி பந்தய ஓட்டத்தில் மோதிக்கொண்ட இரண்டு கார்களும் சுக்குநூறாக நொறுங்கி, சிதறிப் பறந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பலரின் தலைகளை அப்படியே கொய்துவிட்டனவாம்.

விபத்து நேரிட்ட ஒருகணத்திற்குள் ஒருவரது தலை சீவப்பட்டு, பொம்மை போல தரையில் சாய்ந்த கோரக் காட்சியைத் தாம் பார்த்ததாகவும், விபத்து முடிந்த பின்னர் பார்த்தபோது அந்த இடம் ஒரே யுத்த இரணகளம் போல் காணப்பட்டதாகவும் ஒருவர் கூறியிருக்கிறார்.

இரண்டு சிறுவர்களின் தலைகளும் துண்டிக்கப்பட்டுவிட்டனவாம். பலருக்குப் படுகாயங்களுடன் உறுப்புகளும் துண்டிக்கப்பட்டனவாம்!

இந்த விபத்து பற்றி நீதிமன்றம் விசாரணை நடத்தக்கூடுமெனத் தெரியவருகிறது.

நான்கு வல்லரசு மாநாடு

ரஷியா சம்மதம்

மாஸ்கோ, ஜூன் 13—

வல்லரசு மாநாட்டை ஜூலை 18-ந் தேதியன்று ஜெனீவாவில் நடத்தலாம் என மேற்கு வல்லரசுகளுக்கு ரஷியா இன்று பதிலளித்திருக்கிறதாகத் தெரிகிறது.

மாநாடு நான்கு நாட்களில் முடிவடைய வேண்டும் என்று மேற்கத்தியர் குறிப்பிட்டிருக்கும் கால வரம்பு பிரச்சினையை தீர்க்க போதுமான அவகாசமாகாது என்று ரஷியா தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தையற் கலை வல்லுநர்

தோழர் கே. பி. சுந்தரம் பம்பாய் பயணம்

தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள், தையற்கலை பற்றிய பல நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும், 'கமர்ஷியல்' தையற் கலைக் கல்லூரியில் பயிற்சியளிக்கப்படும் முறைகளைக் கண்டறியவும் 18-6-55 அன்று சென்னையிலிருந்து பம்பாய் புறப்பட்டுச் செல்கிறார். அங்கு இரண்டு வார காலம் தங்கியிருந்து, வேறு பல முக்கிய நகர்களுக்கும் சென்று திரும்புவார். (ந. கி.)

கழகக் கூட்டம்

★

இலுப்பூர்—சங்கரம்பந்தல் கடைத்தெருவில்
15—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஆர். பக்கிரிசாமி
பேசுவோர்:
க. அன்பழகன்
ஆர். பாலகுருசாமி
என். கிட்டப்பா
சி. ஐம்பு

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் குடந்தைவருகை

18—6—55 மாலை 6 மணிக்கு, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

தோழர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்குவார்.

தோழர்கள் என். எஸ். இளங்கோ, க. அறிவழகன், மற்றும் பலர் பாராட்டுரையாற்றுவர்.

திருச்சி நகர தி.மு.கழக கிளை தோழர்கட்கு

"16-6-55 இரவு 9 மணிக்கு, திருச்சி பெரியகடை வீதி தி. மு. கழகக் கட்டிடத்தில், திருச்சி நகர தி. மு. கழகத் தொண்டர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் நகரில் உள்ள கிளைக் கழகங்கள் 5 பிரதிநிதிகள் (தொண்டர்கள்) பெயர் குறிப்பிட்டு, கழக அத்தாட்சியுடன் அனுப்பிவைக்க வேண்டுகின்றேன்,"

என்று, திருச்சி நகர தி. மு கழக தொண்டர் படை கன்வீனர் தோழர் ஜி பராங்குசம் அறிவிக்கிறார்.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

18—6—55: காலை 10 மணிக்கு: உளுந்தூர்ப்பேட்டை திரு. எஸ். சண்முகம்-ராஜேஸ்வரி அவர்கள் புதல்விமார்கள் ஆண்டு விழா-பெயர் சூட்டு விழா;
மாலை 6 மணிக்கு: விருத்தாசலம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்.

19—6—55: காலை 10 மணிக்கு: திருச்சி-திருமண நிகழ்ச்சி;
மாலை 6 மணிக்கு: திருச்சி மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதியளிப்பு-பாராட்டுக் கூட்டம்.

20—6—55: மாலை 6 மணிக்கு: பேராவூரணி: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்

21—6—55: மாலை 6 மணிக்கு பட்டுக்கோட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

22—6—55: மாலை 6 மணிக்கு: முத்துப்பேட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

23—6—55: காலை: வேளூர் திருமண நிகழ்ச்சி;
மாலை 6 மணிக்கு: மாயவரம்: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களுடன் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் கலந்து கொள்வார். தஞ்சை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

அண்ணா அறைகூவல்...!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தவறான வழியில் போகாமல்—சிதறிவிடாமல் பார்த்துக்கொள்வதுதான்.

"சிவஷண்முகம் பிள்ளை கூறியதாக, எனக்கு முன் பேசியவர்கள் கூறினார்கள்—'பார்ப்பானை வேண்டுமானாலும் நீக்கிவிடுங்கள்; பக்திக் காரியங்களை எப்படி நீக்கிவிடுவது?'—என்று கேட்டாராம் அவர்!

"பக்தி என்றால் எது? அது நமக்குத் தெரிந்தாக வேண்டும்; கிறிஸ்தவர்களைப் பார்த்தால், ஞாயிற்றுக்கிழமையன்று ஒழுங்காக உடையணிந்து கோவிலுக்குச் சென்று, 'பரமபிதாவே! என்னை, எனது பாவங்களுக்காக மன்னித்துவிடு என்று மண்டியிட்டு வேண்டிக் கொள்வதுடன் போதும்; அதுவே, சிறந்த ஆண்டவன் பக்தி'—என்கின்றனர்.

"முஸ்லீம்களைக் கேட்டாலும், அவர்களும் 'தர்காவிற்குச் சென்று, 'துவா' செய்து வேண்டிக்கொள்வதுடன் சரி,'—என்று சொல்கிறார்கள்.

"ஆனால் நம்மவர்கள்?

"காரமடை என்று ஒரு கிராமம்; அங்கு ஒரு அனுமார் கோவில்; ஆண்டுக்கொருமுறை திருவிழா; பூசாரி, அனுமார் போல ஆடுவான்; ஒரு மணமாகி 7, 8 ஆண்டுகளாகியும் குழந்தையற்றவர்கள், பூசாரி ஆடிக்கொண்டிருக்கும்போதே அவன் வாயில் பழம் தருவார்கள்; எத்தனை பழம் தின்ன முடியும், பூசாரியால்? தின்னும் தின்னாமலும் அவன் வெளியே உமிழ்கிற எச்சில் பழத்தை சேலை முந்தானையால் தாங்கி எடுத்து உண்கின்றனர் பெண்கள்—'பிள்ளை பிறக்கும்' என்ற நம்பிக்கையோடு! இது, 'பக்தி'யின் பெயரால் நடக்கிறது! இந்த 'பக்தி' தேவைதானா?—என்பதை, நமக்கு சிவஷண்முகம் பிள்ளை கூற வேண்டும்.

"நாம் சொல்லுகிறோம்—'பக்தியின் பெயரால் இவை போன்ற ஆபாசங்கள் வேண்டாம்,' என்று! 'ஆண்டவன் ஒருவன் இருக்கட்டும்; அவனை மனதார நினைத்து, மக்கள் பக்தி செலுத்தட்டும்;'—என்று!

வேறோர் தலத்தில் நடைபெறும்—ஆண்டவன் விபச்சாரியை நாடிவிட்டு வீடு திரும்பியதும், ஆண்டவனின் அருமை மனைவி கோபங்கொண்டு, வாழை மட்டையால் தண்டனை தரும் 'மட்டையடித் திருவிழா' பற்றியும் விளக்கிக் கூறிய அண்ணா அவர்கள், 'அந்தத் திருவிழாவும், 'பக்தி'யின் பெயரால்தான் நடைபெறுகிறது; இந்த பக்தி மக்களுக்குத் தேவைதானா?' என்று வினவினார்.

★★★★★★★★★★★★★★★★

திருச்சியில்

தி. மு. க. மாநில மாநாட்டு

நிதியளிப்பு விழா

★

பொதுச்செயலாளர் வரவேற்பு

பொதுக்கூட்டம்

19—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. பி. தர்மலிங்கம்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்

—திருச்சி மாவட்ட தி மு க

★★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாட்டு வரவேற்புக் குழுக் கட்டணம்

★

சென்னையில் நடைபெற்ற பொதுக் குழு முடிவின்படி, திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் கட்டணம் ரூபாய் பத்தும் மே மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டபடி, பல தோழர்களிடமிருந்தும் இன்று வரையில் வந்து சேரவில்லை. இரண்டு முறை அறிவிப்புக் கார்டுகளும் அனுப்பியாயிற்று. இனி, மூன்றாவது முறையாக அறிவிப்புக் கார்டுகள் அனுப்பி வைக்கும் அவசியமில்லாதபடி, வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூபாய் பத்தும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முகவரிக்கு M.O. மூலம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இராயபுரம், சென்னை-13, 14 6—55 } —பொறுப்பாளர், தி. மு. கழகம், தலைமை நிலயம்

ரூபாய் நோட்டுகளை இரட்டிப்பாக ஆக்குவதாக ஏமாற்றிய சாது

போலீசாரால் தேடப்படுகிறார்

அகமதாபாத், ஜூன் 12—

'ரூபாய் நோட்டுகளை மந்திரத்தால் இரட்டிப்பாக்கும் ஆற்றல் பெற்றவன்,' என்று தன்னைக் கூறிக்கொண்டு ஊரையும், சர்க்காரையும் ஏமாற்றிய 'சாது' ஒருவரை போலீசார் தேடிவருகின்றனராம்.

தனது 'சீடர்'களில் ஒருவரான தோல்கா என்பவரிடமிருந்து 1,200 ரூபாய்க்கான நோட்டுக்களைப் பெற்றுக்கொண்டு, சாது கெட்டியாக தைக்கப்பட்ட சட்டு ஒன்றை அவரிடம் தந்தாராம்; மேலும், குறைந்தது 11 மணி நேரம் வரை அதை அவிழ்த்துப் பார்க்கக் கூடாதென்றும், 11 மணி நேரம் கழித்து அவிழ்த்துப் பார்த்தால் அதில் இரண்டு மடங்கு 'கரன்சி' இருக்குமென்றும் கூறியிருந்தாராம்.

அதன்படி, அவிழ்த்துப் பார்க்கப்பட்டபோது, பொட்டலத்தில் வெறும் அட்டைத் துண்டுகள்தான் இருந்தனவாம். சீடர் பரிதாபகரமாக ஏமாற்றமடைந்தாராம்!

சாது தங்கியிருந்த கோவிலில் விசாரித்தபோது, அவர் அங்கிருந்து சென்றுவிட்டதாக போலீசாருக்கு தகவல் கிடைத்திருக்கிறதாம்.

கடவுளைக் காண பணம் கையாடிய விற்பனையாளர்!

ரூபாய் 6,000 ஏப்பமிட்ட 'பக்கிரி'!

போலீசார் நடவடிக்கை

சென்னை ஜூன் 12—

'சர்வேஸ்வரனை'க் காட்டுவதாகக் கூறிய ஒரு பக்கிரிக்கு பணம் தருவதற்காக, தான் விற்பனையாளராக வேலை பார்த்துவந்த நிறுவனம் ஒன்றின் பணத்தைக் கையாடியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டிருக்கிறார் ஒருவர் எனத் தெரியவருகிறது.

டி. பாஸ்கர் ராவ் என்ற அந்த விற்பனையாளர் 'கம்பெனி' பணத்தில் ரூ. 6000 வரை கையாடியிருக்கிறாராம்.

பக்கிரி ஒருவர், சாக்காட்டிற்கு இந்த பாஸ்கர் ராவை அழைத்துச் சென்று, 'பூசை' துவக்கினாராம்.

ஆனால் அந்தோ! பரிதாபம்! 'பூசை' முடிந்து பாஸ்கர் 'கடவுளை'க் காணுமுன் கம்பி எண்ண வேண்டியதாகிவிட்டது.

போலீசார் இப்போது அந்தப் 'பக்கிரி'யைத் தேடி அலைகிறார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.